**பொருள் எண்.1**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் காலை உணவு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால், இந்நகராட்சியின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள அரசு பள்ளிகளில் Flex board அமைக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.17404/2022/M1 நாள் 17.08.2023-ல் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, நிர்ணயம் செய்யப்பட்ட அளவு கோலின்படி 18 எண்ணம் Flex board அமைப்பதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.30,000/- க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.317-1/2023/இ1

**தீர்மானம் எண்.597 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் உள்ள கல்லத்திவிளை பகுதியில் மழைநீர் வடிகால் ஓடையை பழுது நீக்கம் செய்யவும், வார்டு எண்.17-ல் உள்ள செட்டிய தெரு நடுத்தெரு மழைநீர் வடிகால் ஓடையை பழுது நீக்கம் செய்யும் பணிகளை ரூ.400000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.580 நாள் 31.07.2023-ன் படி, மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 25.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜார்ஜ் ஸ்டீபன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.17% அதிகம் |
| 2. | திரு.B.செல்வின் குமார், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.B.செல்வின் குமார், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.08% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.842/2023/இ1

**தீர்மானம் எண்.598 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் மூடு சிலாப் அமைத்தல் பணிகளை ரூ.720000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.579 நாள் 31.07.2023-ன் படி அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 25.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜார்ஜ் ஸ்டீபன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.19% அதிகம் |
| 2. | திரு.B.செல்வின் குமார், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.B.செல்வின் குமார், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.808/2023/இ1

**தீர்மானம் எண்.599 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.4**

இந்நகராட்சிக்குட்பட்ட பொட்டல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு மற்றும் சீம்பிளிவிளை ராஜேஷ் வீட்டின் அருகில் அமைந்துள்ள ஆழ்துளை கிணறு Flushing செய்து மோட்டார் பொருத்தி அமைக்கும் பணியினை ரூ.400000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.561 நாள் 30.06.2023 படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு 25.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு.சுரேஷ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.01% குறைவு |
| 2. | திரு.ஜாண்றோஸ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.12% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சுரேஷ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு**

1. பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.400000/-ஐ நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.668/2023/இ2

**தீர்மானம் எண்.600 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.5**

இந்நகராட்சிக்குட்பட்ட வெள்ளிப்பிள்ளையார் கோவில் முன்பகுதியில் உள்ள Bore No.17 லிருந்து லைன் போட்டு Market pumping line உடன் link செய்வதற்கும், சி.எம்.சி காலனியில் உள்ள Bore No.23 லிருந்து லைன் போட்டு VKP pumping line உடன் link செய்வதற்கும், மற்றும் பாலத்தன்கரை திருப்பில் உள்ள Bore No.21 லிருந்து லைன் போட்டு பர்னட்டிவிளை pumping line உடன் link செய்வதற்கும் ரூ.135000/- மதிப்பீட்டில் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று 25.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஜாண்றோஸ்,<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.49 % அதிகம் |
| 2. | திரு. சுரேஷ்<br>ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.06% குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.சுரேஷ், ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.06% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அ.கு**

பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.846/2023/இ2

**தீர்மானம் எண்.601 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகளை பராமரிக்க தேவைப்படும் உதிரி பாகங்களுக்கு ரூ.30,000/- மதிப்பீட்டில் நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கு மன்றம் தனது தீர்மானம் எண்.511 நாள் 30.06.2023-ன் படி மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 22.08.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | Malani lighting company<br>New No.111, East car street,<br>Tirunelveli | மதிப்பீட்டை விட 0.07 % அதிகம்<br>ரூ.24290/- |
| 2. | Sha changalal Jayanthilal jain<br>52A, East car street<br>Tirunelveli | மதிப்பீட்டை விட 0.89 % குறைவு<br>ரூ.24055/- |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/s.Sha changalal Jayanthilal jain ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.89 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி, பணி உத்தரவு வழங்க நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு, பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** **1.**பணியின் அவசர அவசியம் கருதி, நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2.மேற்படி பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/-ஐ நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.547/2021/இ2

**தீர்மானம் எண்.602 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.7**

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.399/2023/A2 நாள் 06.07.2023-ன்படி, 2023-2024 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சியிலிருந்து செலுத்த வேண்டிய பங்களிப்பு தொகை ரூ.75000/- செலுத்த தெரிவிக்கப்பட்டது. மேற்படி பங்கு தொகையினை பொது நிதியிலிருந்து செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1542/2001/சி1

**தீர்மானம் எண்.603 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில் சுகாதார ஆய்வாளர், சுகாதார அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிக்கையின்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கு பகுதியில் நாய்கள் கருத்தடை மையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் மருத்துவர் இருக்கும் அறை மற்றும் கருத்தடை செய்யும் பகுதியில் pile foundation அமைத்தும், AC வசதியுடன் காங்கிரீட் கூரை அமைக்கவும் நாய் கூடத்திற்கு Sheet கூரை அமைக்க ஆகும் செலவுத் தொகை ரூ.10,00,000/- மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டுவதற்கு திட்ட கருத்துரு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** நகராட்சி பொது நிதியிலிருந்து ரூ.10,00,000/- செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண்.604 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தை கூடும் பகுதியின் அருகாமையில் புதியதாக அமைக்கவுள்ள பல்நோக்கு கட்டிடத்திற்கு இடையூறாக உள்ள இரண்டு எண்ணம் EB pole களை shift செய்வதற்கு மதிப்பீட்டு கட்டணம் ரூ.51,495/- செலுத்த கோரப்பட்டுள்ளது. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.51/2023/இ1

தீர்மானம் எண்.605 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்குட்பட்ட கே.எஸ்.எஸ்.எஸ் காலனியில் Common kitchen பணி செய்யும் போது பணிக்கு இடையூறாக இருந்த EB pole ஐ remove செய்வதற்கு தமிழ்நாடு மின்வாரியம், குளச்சல் அவர்களுக்கு பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டு கட்டணம் ரூ.24,202/- செலுத்தியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.317-1/2023/இ1

தீர்மானம் எண்.606 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10-ல் பேருந்து நிலையத்தின் அருகில் உள்ள ரேஷன் கடையில் பொது மக்கள் உணவு தானிய பொருட்கள் வாங்கும் போது மழை காலங்களில் மிகவும் சிரமத்துடன் மழையில் நின்று வாங்க வேண்டிய அவல நிலை உள்ளதால், வெளி கூரை அமைத்து கொடுக்க வேண்டியும் மற்றும் மழை காலங்களில் சுவர்களில் பாயும் தண்ணீரால் ரேஷன் பொருட்கள் வைக்கும் பகுதியில் மழை நீர் கசிவு ஏற்படுகிறது. ஆகையால் அதனை சரி செய்து தர கேட்டு நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**அ.கு** மேற்படி பணியினை மேற்கொள்ள ரேஷன் கடை அருகில் அமைந்துள்ள பழைய கட்டிட பணியில் உள்ள Sheet -ஐ மேற்படி பகுதியில் அமைத்து இடர்பாடுகளை நிவர்த்தி செய்து தரப்படும் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.965/2023/இ1

தீர்மானம் எண்.607 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, பார்வைக்கு வைக்கப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் நரிக்கல் வழியாக களிமார் வரை செல்லும் மழை நீர் வடிகால் ஓடையானது ஆங்காங்கே இரு கரைகளிலும் மண்சரிவு ஏற்பட்டு மழைநீர் சரிவர செல்ல முடியாத நிலையில் உள்ளதால் ஓடையின் இரு கரைகளையும் சிமெண்ட் சுவர் அமைத்து மண் சரிவை தடுத்து மழை நீர் தேங்காதவாறு சரிசெய்ய கோரி நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**அ.கு** மேற்படி பணியினை திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள வழிவகை செய்யப்டும் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.964/2023/இ1

தீர்மானம் எண்.608 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**பொருள் எண்.13**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24-ல் கொட்டில்பாடு புதிய கோவில் முன் பகுதியில் உள்ள ஏ.வி.எம் கால்வாய் குறுக்கே மக்கள் கோவிலுக்கு சென்று வருவதற்கும், வாகனங்கள் செல்வதற்கும் வசதியாக புதிய பாலம் அமைத்து தர கோரி நகர்மன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்துள்ளார்.

**அ.கு** மேற்படி பணியினை ஏ.வி.எம் கால்வாய் தூர் வாரும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

ந.க.எண்.963/2023/இ1

தீர்மானம் எண்.609 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டது, ஏற்றுக்கொள்ளப்பட்டது

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை வணிக வளாக முதல் தளம் கடை எண்கள்.3,4,5 வரிவிதிப்பு எண்கள்.148/2017008, 148/2017009 மற்றும் 148/2017012 -க்கு குத்தகை காலம் 01.08.2017 முதல் 31.07.2023 உடன் 6 ஆண்டுகள் முடிவடைந்து விட்டது.

மேலும் குத்தகைதாரர் விண்ணப்பங்கள் முறையே 28.07.2023, 28.02.2023 மற்றும் 08.08.2023 தேதிய விண்ணப்பங்களில் உரிமம் மூன்றாண்டுகளுக்கு நீட்டித்து வழங்க கேட்டு புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/- செலுத்தி உள்ளனர்.

எனவே மூன்றாண்டுகளுக்கு 01.08.2023 முதல் 31.07.2023 வரைக்கும் குத்தகை உரிமம் நீட்டிப்பு செய்யவும், மாத வாடகையில் 15% உயர்வு செய்து கீழ்காணும் விபரப்படி உரிமம் புதுப்பித்து வழங்க மன்ற அனுமதி வேண்டபப்படுகிறது.

| வ. எண் | கடை எண். | வரிவிதிப்பாளர் பெயர் (திரு/திருமதி) | வரிவிதிப்பு எண் | தற்போதைய மாத வாடகை(ஜி.எஸ்.டி தவிர) (ரூ.) | 15% உயர்வு செய்யப்பட வேண்டிய வரி | வரி உயர்வு செய்யப்பட்ட பின்னர் மாத வாடகை (ஜி.எஸ்.டி தவிர) |
|---|---|---|---|---|---|---|
| 1. | 3. | சசி | 148/2017008 | 12880 | 1932 | 14812 |
| 2. | 4. | கிரிஜா | 148/2017009 | 7705 | 1156 | 8861 |
| 3. | 5. | நாகராஜன் | 148/2017012 | 7705 | 1156 | 8861 |

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.216/2017/அ1

தீர்மானம் எண்.610 அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.15**

மாவட்ட ஆட்சித் தலைவர் நாகர்கோவில் அவர்களின் அறிவுரையின்படி, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட 8 இடங்களில் 13 தினங்கள் முகாமில் கலந்து கொண்ட பணியாளர்களுக்கு காலை சிற்றுண்டி, மதிய உணவு மற்றும் மாலை நேர தேநீர் வழங்கியமைக்கு உத்தேச செலவுத் தொகை ரூ.60,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.780/2023/இ1

**தீர்மானம் எண்**.611 **அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு**, **ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**.

**பொருள் எண்.16**

இந்நகராட்சிக்கு சொந்தமான துறைமுகப்பாலம் அருகிலுள்ள கட்டண கழிப்பிடத்திற்கு 2022-23 ஆம் ஆண்டில் பலமுறை ஏலம் கோரிய பின்னரும் எவரும் முன்வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. மேற்படி கழிப்பிடத்தை பொது மக்கள் பயன்படுத்த முடியாமல் உள்ளதால் 2022-2023 முதல் கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும், மேலும் நகராட்சி அலுவலகத்தில் உள்ள சாலையோர ஒரு தென்னை மரம் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வந்தது. ஆனால் தென்னை மரம் சாய்ந்து விட்டது. எனவே 2022-23 முதல் சாலையோர தென்னை மரத்தினை கேட்பிலிருந்து நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு** மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.06/2020/அ3

**தீர்மானம் எண்**.612 **அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு**, **ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது**.

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி